Tamil | தமிழ்

Roll up for WA
COVID-19 Vaccination

GOVERNMENT OF WESTERN AUSTRALIA

# தடுப்பூசிகள் பற்றிய உண்மைகளை அறிந்து கொள்ளுங்கள்

புதிய விஷயங்களைப் பற்றிக் கேள்விகள் இருப்பது இயல்பானதுதான். கோவிட் -19 தடுப்பூசிகள் பற்றிய விவரங்களில், எது உண்மை, எது உண்மை இல்லை என்பதைக் கண்டறியவும். நாம் அனைவரும் ஒன்றாகத் தடுப்பூசி பற்றிய நம்பிக்கையை உருவாக்க வேண்டும், ஏனென்றால் தடுப்பூசி போட்டுக் கொண்டுள்ள ஒவ்வொரு நபரும் பெருந்தொற்றைக் கடந்து செல்ல நமக்கு உதவுகின்றனர்.

## உண்மை

### தடுப்பூசிகள் பாதுகாப்பானவை

உலகெங்கிலும் உள்ள பலரும் இணைந்து கோவிட் -19 தடுப்பூசிகளை உருவாக்கி, அவற்றைச் சில மாதங்களில் செய்து முடிப்பதற்காக, எந்தப் படிநிலைகளையும் தவறவிட்டுவிடாமல், பணம் மற்றும் விஞ்ஞானிகளைப் பகிர்ந்து கொண்டு பணியாற்றியுள்ளனர். தடுப்பூசிகள் பரிசோதிக்கப்பட்டு, அவை பாதுகாப்பானவை மற்றும் ஆற்றல் மிகுந்தவை என்று கண்டறியப்பட்ட பின்னரே ஆஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்படுகின்றன. அனைத்து தடுப்பூசிகளும் தொடர்ந்து தரப் பரிசோதனை செய்யப்பட்டு, பாதுகாப்பின் பொருட்டுக் கண்காணிக்கப்படுகின்றன.

### கோவிட் -19 தடுப்பூசிகளில் உயிருள்ள வைரஸ் கிடையாது, அத்துடன் அவை உங்களுக்கு கோவிட் -19 நோய்த்தொற்றை ஏற்படுத்த முடியாது

தடுப்பூசிகள் உண்மையான வைரசைப் போல் பாசாங்கு செய்து, எவ்வாறு தற்காப்பு செய்து கொள்வது என்பதை உங்கள் உடலுக்குக் கற்பிக்கின்றன. இது உங்களுக்கு உண்மையிலேயே உடல்நிலை சரியில்லாமல் போய், மருத்துவமனைக்குச் செல்வதையோ அல்லது இறப்பதையோ தடுக்க உதவும்.

### தடுப்பு மருந்து செலுத்தப்படும் ஊசி வழியாக, மின்னணுத் துகள் (microchip) செல்லாது

இந்த கட்டுக்கதை, சமூக ஊடகங்களில் பரவும் ஒரு போலி காணொளியை அடிப்படையாகக் கொண்டது.

## கட்டுக்கதை

- கோவிட்-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்பதை உறுதிப்படுத்துவதற்கு முன்பே, அவசரகதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- கோவிட் -19 தடுப்பூசிகள் உங்களுக்கு கோவிட் -19 நோய்த்தொற்றை ஏற்படுத்தலாம்.
- கோவிட் -19 தடுப்பூசிகள் என்னைக் கண்காணிக்க மின்னணுத் துகளைக் (microchip) கொண்டுள்ளது.

# தடுப்பூசிகள் பற்றிய உண்மைகளை அறிந்து கொள்ளுங்கள்

## உண்மை

### மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் தடுப்பூசிகள் இலவசம்

தற்காலிகக் குடியுரிமை பெற்றவர்கள், அகதிகள், புலம் பெயர்ந்தோர்கள் மற்றும் செல்லுபடியாகும் விசா இல்லாதவர்கள் அனைவரும் இதில் அடங்குவர்.

### தடுப்பூசிகளில் உள்ள ஒவ்வொரு மூலப்பொருளும் எங்களுக்குத் தெரியும்

தடுப்பூசிகளில் பெரும்பாலும் தண்ணீர், உப்பு, சர்க்கரை மற்றும் கொழுப்புகளே உள்ளன. தடுப்பூசிகளில் கிராஃபீன் ஆக்சைடு (graphene oxide), பசையம் (gluten), முட்டை, கோதுமை, தேனீ விஷம், மரப்பால் (latex) அல்லது விலங்குப் பொருட்கள் போன்றவை கிடையாது. ஆஸ்திரேலிய ஃபட்வா கவுன்சில் (Fatwa Council) தடுப்பூசிகளை ஹலால் (Halal) என்று அங்கீகரித்துள்ளது.

### உங்களுக்கு மெடிகேர் இல்லையென்றாலும், நீங்கள் COVID-19 தடுப்பூசி ஒன்றைப் பெறலாம்

உங்கள் சந்திப்பு ஏற்பாட்டின் போது, உங்கள் அடையாளத்தை நீங்கள் நிரூபிக்க வேண்டும், எனவே தயவுசெய்து உங்கள் பெயருடன் கூடிய ஓட்டுநர் உரிமம், கடிதம் அல்லது இரசீது போன்ற ஒர் ஆவணத்தைக் கொண்டு வரவும்.

### கோவிட் -19 தடுப்பூசியைப் பெறுவதனால் - அது உங்கள் உடம்பின் எந்தப் பகுதியாக இருந்தாலும், உங்களுக்குக் காந்தசக்தி ஏற்படாது

கோவிட் -19 தடுப்பூசிகள் இதைச் செய்யக்கூடிய எந்த காந்தப் பொருட்களையும் கொண்டிருக்கவில்லை. ஒரு காந்தத்தை ஈர்க்க உங்களுக்கு நிறைய உலோகம் தேவைப்படும். எடுத்துக்காட்டாக, மக்கள் இரும்புச்சத்து கொண்ட பல வைட்டமின்களை (multi vitamins) எடுத்துக்கொள்கிறார்கள். இது அவர்களைக் காந்தமாக்காது, ஏனென்றால் அவை நீர்த்துப் போய், உங்கள் உடல்முழுவதும் பரவியிருக்கின்றன.

### கோவிட் -19 தடுப்பூசிகள் கருவுறும் திறனைப் பாதிக்காது

தடுப்பூசிகள் இப்போதோ அல்லது எதிர்காலத்திலோ குழந்தையைப் பெறுவதற்கான உங்கள் திறனைப் பாதிக்காது. கர்ப்பிணிப் பெண்கள் தங்களையும், தங்கள் குழந்தையையும் பாதுகாக்க, கோவிட் -19 தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளப் பலமாகப் பரிந்துரைக்கப்படுகிறது.

## கட்டுக்கதை

- ✗ கோவிட் -19 தடுப்பூசி ஒன்றைப் பெற பணம் செலவாகும்.
- ✗ இந்த தடுப்பூசிகளில் என்ன உள்ளது என்பது எங்களுக்குத் தெரியாது.
- ✗ ஒரு கோவிட் -19 தடுப்பூசியைப் பெற, நீங்கள் பயன்பாட்டில் உள்ள மெடிகேர் அட்டை (Medicare card) ஒன்றை வைத்திருக்க வேண்டும்.
- ✗ கோவிட் -19 தடுப்பூசிகள் உங்கள் கையில் ஒரு காந்தத்தை ஒட்ட வைக்கும்.
- ✗ கோவிட் -19 தடுப்பூசிகள் கருவுறும் திறனைப் பாதிக்கின்றன.

உங்கள் கோவிட் -19 தடுப்பூசிக்குப் பதிவு (register) செய்து கொண்டு, முன்பதிவும் (book) செய்துகொள்ளவும்

**rollupforwa.com.au**

13COVID
(13 26843)

மொழிபெயர்த்துரைப்பாளருக்கு
* அழுத்தவும்